# கிருக்கி

நெடுந்தீவு - முகிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்நூல்

அருட்தந்தை

அமிர்தநாதர் இயூஜின் அமல்றாஜ்

அவர்கட்கு (21.06.2009)

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கி

நெடுந்தீவு - முகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• நூல் - கிறுக்கி • முதல்பதிப்பு - 15.05.2009

• பதிப்புரிமை - நூலாசிரியர் • வடிவமைப்பு - அ. நிலோஜினி

• அச்சாக்கம் - ஜெயா அச்சகம் • பக்கங்கள் - 90

• மலர் விலை - 200/=

## நூலாசிரியரின் பிற நூல்கள்

- மனத்திரை மேகங்கள்

  (புது கவிதைத் தொகுதி)

- ● ● ●

  (காதல் கவிதைகள்)

- இப்போது உங்களிடம் - கிறுக்கி

  (மாதிரிக் கைக்கூ கவிதைகள்)

- அச்சில் :-

  ➢ கனவுகளுக்காகவே உறங்குகிறேன்

  (கவி நாவல்)

  ➢ கை எழுத்தில்லாத காகிதம்

  (சிறுகதைக் கவித் தொகுதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜீவனுள்ள சித்திரம்

நெடுந்தீவைச் சேர்ந்த இளம் வயதிலே ஆற்றலும் படைப்பும் நிறைவாக ஒருங்கே அமைந்த வி. முகிலன் அவர்களின் மூன்றாவது தொகுப்பாகிய "கிறுக்கி" க்கு ஆசி வழங்குவதில் மிக்க மகிழ்சி அடைகிறேன். இவரது முதலாவது கவிதைத் தொகுப்பாகிய "மனத்திரை மேகங்கள்" இவரின் நீண்ட ஆளுமையை வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது ஜீவனுள்ள சித்திரமாய் இளம் வயதிலேயே கவி வரையும் நெடுந்தீவு மகனுக்கு இவ்வூர் மக்கள் ஆக்கமும் ஊக்கமும் என்றென்றுமே வழங்க வேண்டும் மென்று கேட்டுக் கொள்கிறேன்.

- நன்றியுடன் -
டாக்டர் என். பேரின்பநாயகம்
516, கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

## கவி மகுடம்...

"விசிறிகளை விற்றுக் கொண்டிருக்கிறேன்
மூச்சுத் திணறும் புழுக்கத்தில்" அறிமுகமாகாத கவிஞரே உங்கள் "..." தொகுப்பில் என்னை ஈர்த்த கவிதை அது........ கனிவு, தெளிவு, நிறைவு, எளிமை, விவேகம், சந்தம், கற்பனை, இனிமை, செழுமை, புலமை எல்லா ஐஸ்வரியங்களையும் தங்களது கவிதைகளில் சரியான சந்தர்ப்பங்களில் சந்திக்கிறேன்....... பத்திரிகைத் துறையில் வலம் வந்து இன்று நூல்களாய் வெளியிடும் கவி மகுடமே முகிலனே தங்களது ஆக்கங்கள் தொடர்ந்தும் மலர என் வாழ்த்துக்கள்.

- பிரியவாசகி -
இரவிச்சந்திரன்-மீரா
மோதர வீதி,
கொழும்பு - 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ......கிறுக்கி......

இக் கவிதைகளின்
படைப்பின் - நிமிஷங்கள்
ஒவ்வொன்றுமே அழகானவை !
மனநிலை + பருவங்கள் + வாழ்க்கைமுறை
சமூக மாற்றங்கள் + உணர்ச்சிச் சிதறல்கள்
+ அரசியல் நிலை என்பவற்றோடு
என் கிறுக்கல்கள் அதிகம்
உடன்படுகின்ற போதிலும்........
சமுதாய திருத்தம் + வர்க்கப் போராட்டம்
தர்மநியாயங்கள் + முற்போக்கு சிந்தனைகள்
+ சம்பிரதாய சடங்குகள் + முறைகேடுகளின்
நிறம்மாறல்கள்...... ஒட்டு மொத்த
வாழ்வியலையும் கிறுக்கி இருக்கிறேன் !
மனிதத்துவத்தை + காதலை + அதன் பரினாமத்தை
மனசின் பரிபாஷையை + ஆன்மாவின் தாபங்களை
+ அனுதாபங்களை............... எல்லாவற்றுக்கும்
பேனாவால் பாதை அமைத்து எழுத்துக்களாய்
பயணமாகி இருக்கிறேன் !..........
இக்கவிதைகள் எதையோ......?...... உங்களுக்கு
நேரடியாகவும் சொல்லிக் கொள்கின்றன....
இரகசியமாகவும் சொல்லத் துடிக்கின்றன.......
நான் பார்த்த + ரசித்த அனுபவ அலைகளின்
+ யாதார்த்த அடையாளங்களின் நடமுறைச்
சீவியங்களே..... இங்கு கவிதைகளாய் மறுபிறவி
எடுத்திருக்கின்றன....

"கிறுக்கி யாருமே இல்லை.......
என்னை கிறுக்க வைத்தவள்"

— அன்புடன் —
வீ.முகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

....................

....................

உனக்கும்

வாழ்த்துப்பா

எழுத......

வேண்டும்

என்பது !

என்

நெடுநாள்

ஆசை........

.................

.................

உன்

தொகுப்புகளில்

என்

கவிதைகளை

அவதானிக்கும்

வரை.....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழுதியும்........
சகதியுமான.........
என்
ஊர்த்.....
தெருக்களில்........ நீ
கால்
மிதித்து
நடந்து
வராதே........?
.................
.................அவை
புதைந்த
அடையாளங்களைக்
கூட
யாருமே – இங்கு
புனரமைக்க
மாட்டார்கள்
..................



கிறுக்கி – நெடுந்தீவு முகிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை

முறைகள்

வில்லை........

உடைத்து

உடைத்துக்

களைத்துவிட்டேன் !

......................

......................

இதுவரை

இல்லையே

எனக்காக

ஒரு

......................

......................

"சீதை"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



....................

இரண்டு

தலைமுறைகளுக்கு

மேலாக......

என்

குடும்பத்து

துணிகளை

எல்லாம்

தோய்த்து

புதுசாக்கித்

தந்த

....................

....................

அவர்கள்

மட்டும்

ஏனோ.........?...........

அழுக்காகவே

இருக்கிறார்கள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்
எல்லாச்..........
சொத்துக்களும்
அடகுக்
கடைக்குப்
போய் விட்டன
இன்னும்
ஒன்றே
ஒன்று
அவசரமாய்
போக
இருக்கிறது
...............
...............
அது
..................
"நான் தான்"
...................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையே

எனக்கு

ஒருவார.......

அவகாசம்

கொடு...........!

..................

கூரையின்

ஓட்டைகளை

அடைத்துக்

கொள்கிறேன்....

...................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

....................

....................

வெள்ளைப்......

பூக்களை

விதவைகளாய்

நினைப்பதில்லையே.....

....................

....................

பட்டாம்

பூச்சிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணே.....

என்

கவிதைகளை

மெதுவாகப்...

படி !

..................

..................

உன்

உதடுகளுக்கு

நொந்துவிடப்.......

போகிறது !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதனம்
வாங்குவதற்கு
பதிலாக......
நிர்ணயிக்கப்பட்ட
விலையில்
கடைத்
தெருக்களில்
விற்பனை
செய்யலாமே
மணமகன்களை......
.......................
.......................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ – சென்று.......
கொண்டிருக்கிறாய் !
உன்னோடு
பேசுவதற்கே.......
நானும் – வந்து
கொண்டிருக்கிறேன் !
சொல்லி வைத்தது
போல – நீயும்
திரும்பிப் பார்க்கிறாய் !
எனக்கு.......
எப்போதும் இல்லாததோர்
சந்தோசம்
பின்புதான் – எனக்கே
தெரிய வந்தது !
என் பின்னால்
வந்து கொண்டிருந்தவன்
...................
...................
உன் காதலன்
என்று.....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறங்கிக் கிடந்த
உயிர்........
கருவறைக்கதவுகளை
உதைத்து
உடைத்துக் கொண்டு
ஆவேசமாய்.......
மண்ணுக்கு வந்தது !
தவிப்பிற்கு தாய்ப்பால்
இல்லாமல்......
இரத்தத்தில் – நீச்சல்
அடிப்பதற்கா......?
உடுக்க ஓர்
கச்சை துண்டு
இல்லாமல்.......
வீதி யோரத்தில்
பிச்சை எடுப்பதற்கா.......?
இல்லை.........
பிறர் எறிந்த எச்சில்
எடுப்பதற்கா.......?
....................
....................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..................

..................

தேசிய
ரீதியில்
விருது.........
வாங்குகிறது !

......................

......................

சாக்கடைக்குள்
தள்ளி விட்டுப்.........
போகும்
"தமிழ்ச் சினிமா"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியோரத்து
வெளிச்சத்தையாவது
வாங்க..........
யன்னலைத்
திறந்தேன்.......!
..................
யன்னலோரத்து
வெளிச்சத்தில்
பங்கு
கேட்டு
வரிசையில்
என்
தம்பியும்........
தங்கைகளும்......
..................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..................

இளமைப்.....

பருவம்

என்பதாலா........?

நரம்பு

அறுந்த

பின்னும்

அந்த.......

வீணைக்கு

விலை

இருக்கிறது.....

.................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியால்
அந்தச்.......
சிறுவன்
புலம்பிக்
கொண்டிருக்கிறான்.
வால்
ஒடிந்தது
தெரியாமல்
..................
..................
ஒரு
குரங்கிடம்........




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசாரி
இல்லாமல்.......
நம்
ஊரில்
எத்தனையோ........?
கோயில்கள்
.......................
............ அதில்
ஒன்றுக்காவது
உண்டியல்
இல்லாமல்.......
.......................
.......................
இல்லை...?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவு

மணியா.......?

.................

பூஜை

மணியா.......?

.................

இனங்காண்பதற்குள்ளே

இன்னொரு

மணி

அடித்து

விடுகிறது...!

.............

.............

இடைத் தேர்தலைப்

போல......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையும்
வாழ
விடுங்கள்......!
.................
............. இனியும்
உங்களுக்கு
கொடுப்பதற்கு
என்னிடம்
என்ன.......?
இருக்கிறது !
..................
.................. என்
பிச்சைப்
பாத்திரத்தை
தவிர......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்
கொடுத்த
ஒரு
சோடி
கால்
கொலுசுக்காய்
என்னை......
காதலிக்கிறாய் !
................
............... அதை
என்
மனைவியிடம்
நான்
களவாடியதை
நீ......
அறியமாட்டாய் !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

....................

....................

சூறாவளியால்

கோயிலும்

சாய்ந்து

விட்டது !

............கடவுள்

எங்கே

இடம்

பெயரப்

போகிறாரோ......?

.....................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளன்
நிர்வாணத்தோடு
அலைகின்றான்......

......................

......................

வாசகர்கள்
பொன்
ஆடையை
போர்த்தி......
உறங்குகிறார்கள்

.................

.................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவப்பெட்டியை
மொய்க்கும்
ஈக்களை
கலைத்துக்
கொண்டு......
தலைமாட்டில்
புலம்பியபடி
மனைவி.......
கானல்
வடித்தபடி
கால்மாட்டில்
வளர்ப்பு
நாய்......
.....................
பிள்ளைகள்
"வெளிநாட்டில்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

....................

....................

தாய்ப்பாலையும்

"பால்மா"......

பைக்கற்றுகளாய்

விற்பனை

செய்யலாம்

என்றால்

பெண்களில்.......

அதிகமானோர்கள்

இன்று.......

....................

....................

கோடீஸ்வரர்கள்

பட்டியலில்......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடி........

விழுவது

தெரியாமல்

பூக்களை

யார்.......?

முதலில்

பறிப்பதென்ற.......

போராட்டமாகி

விட்டது !

.................

.................

"திருமணம்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

………………..

………………..

நிலவொளியில்

இருந்து

சேமித்துக்………

கொண்டிருக்கிறேன் !

கணனி

பற்றியதான…….

தகவல்களை

…………………..

…………………..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் பாடசாலை
கலை விழாவுக்கு
நீயும்வருகிறாய் - நானும்
வருகிறேன்
நமக்கிடையில் - எந்த
சமிக்கைகளுமே இல்லை
நீயும் பார்க்கிறாய்
நானும் பார்க்கிறேன்
நமக்குள் எந்த......
பரிமாறல்களுமே இல்லை
அப்போது - நீ ஓர்
சிறுவனைத் தூக்கி - உன்
மார்போடு அணைக்கிறாய்
சில கணங்கள்
திக்கிப்போனேன்.....
உன் காதலனாய்
இருப்பதை விட
.....?..........?.....
அந்த சிறுவனாயாவது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.....................

.....................

குருட்டுப்
பிச்சைக்காரனின்
தட்டில்........
காகம்
எச்சமிட்டுப்
போகையில்
சில்லறைகள்

.....................

.....................

விழுந்து
விட்டதான.......
சந்தோசத்தில்
கைகள்
நீள்கிறது.......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரிகளே
உங்கள்
முக......
மூடிகளை
ஒரு
தடவை
கழற்றுங்கள்
நாங்கள்
உங்கள்
முகங்களை
ரசிக்க
அல்ல.......
எங்களிலும்
.................
.......................
சிலரைக்
காணவில்லை
...............





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...................

கண்ணீரையும்

புன்னகையையும்

குடும்பம்

நடாத்த

விட்டால்........

வாரிசுகள்

எந்த

சாயலில்

வாழத்

தொடங்குவது.......!

......................

நம்

சுகந்திரமாவது

ஞாபகம்

வருகிறதா.........?

......................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.......................

.......................

வரப்......

போகும்

சூறாவளியை

முன்னிட்டு......

வழங்கப்

படுகிறது

நிவாரண........

விண்ணப்பப்

படிவங்கள் !

.....................

.....................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் என்றேன்
கவிதை என்றேன்
கங்கை நதி என்றேன்
கண்ணின் மணி என்றேன்
கவரி மான் என்றேன்
கம்பன் மகள் என்றேன்
கனவுத் தோழி என்றேன்
இன்னும் - உன்னை
எத்தனையோ எல்லாம்
என்றேன் என்றேன்
ஏன் பெண்ணே.......
என்னை - நீ
கழுதை என்கிறாய்
நான் யேசுவை சுமந்த
நல்ல கழுதையா.......?
பெண்ணே
உன் நினைவுகள்
சுமக்கும்............





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டியடித்தபடி
குடங்களும்
வரிசையில்
இருக்கிறது.....

....................

குமரிகளும்
வரிசையில்
நிற்கின்றனர் !

....................

ஒரு குடம்
தண்ணீர்
நிறையும்
முன்னரே
ஏனோ......

................

..............

இரண்டு குடம்
வியர்வை
நிறைந்து
விடுகிறது !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை

மாந்துகளுக்கு

..................

..................

கல்லறைக்குள்ளும்

தூக்கம்

வராது........!

விழித்திருந்த

பழக்க

தோஷமோ.....?

என்னவோ

....................

....................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்...
ஒற்றைக் காலை
மிதித்துக் கொண்டு
எத்தனையோ
கால்கள் !
நிவாரணக் கடை
வரிசையோ என
நிதான மற்றுப்
போனேன் !
கொஞ்சம் யோசித்தேன் !
எனக்குத்தானே........
குடும்ப அட்டையே
இல்லை என.........
அப்பவும் – எனக்கு
ஞாபகம் வரவில்லை
நான்........
பஸ்ஸில் பயணித்துக்
கொண்டிருப்பது !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாடிப் பூச்
செண்டுகளை......
கொலை
செய்ய
கோபத்தோடு
கோஷம்
போடுகிறது
இரும்புக்
கோடரி
............ ஓ
ஒற்றை ஆட்சியின்
சாயல்
தெரிகிறதா.........?
..................
..................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..................

..................

நிர்வாணமாய்

நின்று.......

வரைந்து

கொள்கிறேன்

...............

...............

ஆடை......

அணிந்ததான

ஓவியங்களை......

.................

.................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தது

பள்ளியில்.......

..................

இளையது

தொட்டிலில்.......

.....................

மற்றது

மடியில்.........

................

அடுத்தது

வயிற்றில்........

...................

கடைசி......?....

................

................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாள்
ஞாபகங்கள் ~ என்
நெஞ்சை விட்டு
அகலவே
இல்லை..........
என்னைத் தூக்கி
இதயத்தில்
இருத்தியவர்களும்
ஒதுங்கி நின்றார்கள்
உறவுக் காரர்களே
என்னை
முறாய்த்துப் பார்த்தார்கள்
ஆனால்............
தூரத்தில் பார்த்ததும்
ஒருவன்
உயிர் உருக உருக
ஓடி வந்தான்
"வாலை ஆட்டியபடி"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை
குமரி
ஆனாள் என்று.....
ஊராருக்கெல்லாம்
அழைப்பு
வைத்து
ஆடம்பரமாய்
சடங்குகள்
முடிந்து
போனது !
அப்போது
அவள்
கர்ப்பிணி
என்பது
தெரியாமல்.........
...................
...................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடாய்
தேய்ந்து போன
என்
ஒற்றை
றப்பர்
செருப்பு
திருட்டு
போகையில் தான்
நினைத்துப்
பார்த்தேன்!
அட.......கடவுளே
நல்ல காலம்
................
................
என் கால்
களவு
போகவில்லை
என.........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..................

..................

பெரும்

வள்ளல்கள்

வரிசையில்

நானும்

ஒருவன்

மேலதிகமாக

..................

பிச்சை

எடுக்கும்

நாட்களில்.......

.....................

.....................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

………………

இன்னமும்
பத்திரிகைகளில்
வேலைவாய்ப்பு
விண்ணப்பங்கள்
தேடிக்
கொண்டே…………
இருக்கிறேன்!
ஒரே
ஒரு
வேலை
மாத்திரம்………
காத்துக்
கொண்டிருக்கிறது!

………………

………………

"மணமகன் தேவை"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்

ஊரின்

பிரதான

வீதிகளை

விட.........

ஒற்றையடிப்

பாதைகளிலே

மக்கள்

பாவனை

அதிகம் !

.............

.............

குன்று

குழிகளை

தாண்டிப்

பயணிப்பது

கடினமானதால்......

..........................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...................

...................

உனக்குள்

"பிடிவாதமும் திமிரும்"

முளைத்ததில்

இருந்தே..........

போராட்டத்தைக்

கைவிட்டு

தீர்வுக்குத்

திரும்பினேன்.......

நீ

...................

...................

பருவம்

அடைந்தது

தெரிந்து.......

...................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே.........

இனியாவது.....?

என்னை

வாழவிடு !

................

................

நான்

இறந்த

பின்பாவது

என்

அருகில்

வந்து விடாதே !

சிலவேளை

உன் வருகை

கண்டு

உயிர்த்து விடுவேன் !

....................

....................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல்
பச்சைப்.........
புடவை
கட்டி
புன்னகைக்கிறது !

.................

.................

அறுவடையின்
போதுதான்
தெரிய
வருகிறது !
விளைந்திருந்தவைகள்
களைகள்
என்பது !

.............

............பெரும்பாலும்
நம் வாழ்க்கையும்
இப்படித்தான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

........................

........................

அதிகம்

ஏழைகளே

விரதம்

இருக்கிறார்கள்

"முத்தி"

பெறுவதற்காகவா.......?

இப்படியாவது

வறுமையை

ஒழிக்கவா........?

..................

..................

எதற்காக ?

...................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில்
தோன்றுவாய்
முற்றத்தில்
மலராய்.......
மாலையில்
தோன்றுவாய்
ஜன்னலில்
நிலவாய்........
நடுச்சாமத்தில்
தோன்றுவாய்
கண்களில்
கனவாய்..........
காதலை ஏன்...?
தோற்க்கவைத்தாய் !
........................
உன்
திருமண
மடலால்........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..................

..................

அரசியல்

வாதியாக

ஆசைப்பட்டேன்!

இந்த

தேர்தலில்

வாக்களிக்கவே

எனக்கு

வாய்ப்புக்கிட்டவில்லை

..................

..................

நான்

"வேறு நாட்டவன் என்று"

......................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

....................

....................

பிச்சைக்காரர்களை

அவதானித்தால்

நானும்

பரிதாபப்படுகிறேன்

....................

....................

கொடுக்க

என்னிடமும்

எதுவுமே

இல்லாததால்........

....................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்......
வீதியும்
தண்டவாளமும்
பக்கம்
பக்கமாய்
இருக்கிறது !
பாவனையில்
ஏனோ..........?
இரண்டுமே
முட்காடுகள்
..................
நான்..........
யாப்பை
சொல்லவில்லை
..................
..................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..................

..................

நீ

என்னையும்.......

அவனையும்......

காதலிக்கிறாய் !

..................

நிச்சயமாய்

"மனிதன்"

குரங்கில்

இருந்துதான்

பிறந்திருக்கிறான் !

....................

....................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்

ஊதியத்தையே

நம்பி

வாழ்கிறது !

....................

....................

தூரதேசத்தில்

வசிக்கும்

என்

தாயின்.............

....................

என்

மனைவியின்...........

..................

என்

குழந்தைகளினதும்.....

.................

புன்னகை........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதக்கடைசியில்
நிறையவருத்தப்படுகிறேன்
என் குழந்தைகளின்
ரியூசன் பீஸ்........
பால்க் கணக்கு......
பேப்பர் காரனின்
உதட்டுக் கடிப்பு......
பக்கத்து பலசரக்குக்
கடைக்காரனின்
முறாய்ப்பு........
சொந்தக்காரர்கள்
அல்லது
தெரிந்தவர்கள்
யாரேனும்
ஒருவரது
திருமணச்சடங்கு
எல்லாவற்றையும் விட
என் மனைவியின்
மாதவிலக்கு.......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் காதலி
கொலுசு
அணிவதில்லை.....
அவள்
புன்னகையே
கொலுசொலியானதால்....!
என் காதலி
மலர்களை
சூடுவதில்லை.....
அவளும்
மலரானதால்.......!
என் காதலிக்கு
காதலைப்
பிடிப்பதில்லை
நான்
அவளைக்
..................
..................
காதலிப்பதால்........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளைத்
தெரியாதவர்கள்
நம் ஊரில்
எவருமே இல்லை
................... தினம்
எத்தனையோ பேர்
இவளிடம் வந்து
போகிறார்கள் !
தன்னிடம் வரும்
எல்லோரையுமே
இவள்
அணைத்து தழுவிக்
கொள்கிறாள்
ஆனால்
....................
இவள்
விபச்சாரி அல்ல
"வீதியோர நிழல் மரம்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

................

................

கோயில்க்

கதவுகள்

திறக்கப்பட்ட

போதும்

உண்டியல்க்

கதவுகள்

மூடியபடியே.........

....................

....................

நம்பிக்கைக்கு

ஏனோ......?

ஜன்னல்கள்

கூட

இல்லை.........

................

................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.....................

.....................

தந்தையின்
மரணத்திற்குப்
பிறகு
எங்களுக்கு
ஆறுதல்
சொல்ல
நிறையப்........
பேர் !
வந்தார்கள்
தாங்களும்
எங்கள்
உறவுக்காரர்கள்
என்று
"நாங்கள் நம்ப
முடியாதவாறு"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்

தேசத்தின்

வரை

படத்தை

பெரும்

கல்லறையாகக்

குறிப்பிடலாம்........

....................

....................

மனிதர்கள்

பிணங்களாகத்தானே

வாழ்ந்து

கொண்டிருக்கிறார்கள்.....

....................

....................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

......................

......................

சமாதானத்தாய்
உயிரோடு
சவக்கிடங்கில்
புதைக்கப்பட்டு
விட்டாள் !
இப்போது
அவளின்
வறுமைக்
குழந்தை
மாத்திரமே
புலம்பிக்
கொண்டிருக்கிறது
தாய்ப்பாலுக்காக
அல்ல.............
பால்மாவின்
விலைவாசிக்காய்...........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசு
களவு போனது
அழவில்லை......
காத்துக் கிடந்தேன் !
கற்புக் களவு போனது
அழுதேன்......
கண்ணீர் வரவில்லை
வயிறு நிறைந்தது !
மானம் களவு போனது
கண்ணீர் வர
அழுதேன்........யாருமே
கண்டுகொள்ளவில்லை !
கடைசியில் யாரோ
எல்லாம்
வந்து போனார்கள் – என்
உள்ளாடைகள் கூட
களவு போனது.........
அழுவதற்குத்தான்
என்னிடம்
கண்ணீர் இல்லை.........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பாதங்களில்
தட்டுப்பட்டதும்
கீழேகுனிந்து எடுத்தேன் !
எவன் முகவரியும்
எழுதப்படவில்லை
சிரித்துக் கொண்டே
கிழித்துப் படிக்க
முயன்றேன் - உள்ளே
இருந்தவை சில
புகைப்படங்கள்
மட்டும்தான் !
ஊர் நடுவே
விசாரித்தேன்.....
யாருக்கும் முகம்
தெரியாதாம் !
பல மாதங்களின் பின் !
பத்திரிகையில் பார்த்தேன்
குண்டு வீச்சில்
மாண்டு போன...அந்த
ஏழைக்குடும்பமாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உயிருக்கு உயிராக"
இந்த.....
பிறவியில்
உன்னைக்
காதலித்தேன் !
கட்டாயம்
அடுத்த
பிறவியில் நாம்
சேர்ந்திருப்போம்.....
என்கிறாய் !

.......................

.......................

அப்படி என்றால்
போனபிறவியில்
உன்னைக்
காதலித்து
"உரிமையோடு"
ஏமாற்றி
இருப்பேனே.......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையில் பொருளும்
இல்லை
கையில்
பணமுமில்லை.....
நடத்துனன்
இரக்கமின்றி
நடுவீதியிலே
இறக்கிவிட்டான் !
முன்னால் வந்த
முதியவன் விழியும்
நனைந்தபடி......
பின்னால் வந்த
கன்னியின் விழியும்
கனவை
சுமந்தபடி..........
எந்த ஊர் என்று
வினாவினேன் !
தாங்களும்
அகதிகளாம்........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

......................

......................

ஜனநாயகப்

பெண்ணின்

மார்பில்

விலை

ஏற்றப்பாலே........

சுரந்து

கொண்டிருப்பதால்

....................

....................

ஏழைக்

குழந்தைகளே

சமுதாயத்தில்

எக்கச்சக்கமாகி

விட்டன !

...................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

....................

....................

வியாபாரிகளும்

அவசியப்

பொருட்களை.........

விற்பனைக்கின்றி

விதவைகளாக்குகின்றார்கள்

...........................

...........................

வரவு

செலவுத்திட்ட

வாய்கள்

திறக்கும் வரை !

......................

......................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிக்
குதிரைகளில்
ஏறிக்.........
குந்திக்கொண்டு
சவால்களோடு
சவாரி
செய்கிறோம் !
....................
....................
ஏன்தானோ.......
அடிமைகளை
ஏறிமிதித்துக்
கொண்டு.....
....................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

....................

....................

தாழ்த்தப்பட்டு....
ஒடுக்கப்பட்டு.....
வாழ்ந்த....
அந்த
குடிசைத்....
தாயின்
குழந்தைக்கு

.......................

.......................

வறுமை
பிரசவத்தில்
இருந்தே
பழக்கப்பட்டது !

......................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னும்........
பொருளும்........
விலங்குகளிடமும்
இருந்திருந்தால்.....
..................
..................
அவற்றுக்கும்
தாலிகட்டி
வாழ்வு
கொடுக்க
வரிசையில்
நின்றிருக்கும்
நீண்ட
ஒரு
பெரும்.....
கூட்டம்.....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து
போன
இரவுகளில்......
என்
வசம்
சின்னத்துண்டு
வெளிச்சமாவது
இருந்திருந்தால்
என்
சேலையை
உரிந்து
போனவர்களின்
முகங்களை.....
......................
......................
ஊருக்கே
அடையாளம்
காண்பித்திருப்பேன் !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..................

..................

விறகுகளுக்கும்

இங்கே........

விலையேறிப்

போனதால்

..................

சுடுகாட்டிலும்

குளிர்

காய்வதற்கு

சிலர்

நகரக்

கூடும்......

..................

..................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில்
என்
வீட்டில்
அவளுக்கொரு
சிலை
வைக்கப்
போகிறேன்
.................
.................
கடவுளே
வீணாய்
என்னோடு
கோபித்து
விடாதே....?
.....................
.....................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

………………

………………

வாரப்…….

பத்திரிகைக்கு

இருக்கும்

ஆயுள்

கூட

என்

காதலுக்கு

இல்லையே…

………………

………………

நீ

நாளுக்கு

நாள்

ஆட்களை

மாற்றிவிடுவதால்……





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.......................

.......................

என்னை

அகதி

என்று

சொல் !

ஏற்றுக்கொள்கிறேன்......

ஆனால்

அனாதை

என்று

சொல்லிக்கொள்ளாதே

நீயிருக்கும்

போது

"தோழியே......."

.......................

.......................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ
குழந்தையாய்
இருக்கையில்
உன்னைத்
தூக்கி
அணைப்பவர்கள்
மீது
கோபப்பட்டேன்
.....................
.....................
அப்போது
நானும்
குழந்தையாகவே
இருந்து
கொண்டு........
..................
..................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன........

வயதில்

கட்டிய

மணல்

வீட்டில்

....................

....................

நீயும்

நானும்

வாழ்ந்ததாகவே

கருதுகிறேன் !

....................

....................

இப்போது

நீ

இன்னொருவனுக்கு

சொந்தமான

போதும்.........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துக்
கொடுத்த
அந்த.........
பெண்ணிடம்
என்
குழந்தையின்
வியாதியைப்
பற்றி
விசாரித்தேன் !
..................
......................
பாவம்
அது
தந்தை
வழிப்
பரம்பரை
நோய்.......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

……………………

……………………

கோயில்
திருவிழாவில்
வாங்கிய
சாமிப்.....
படத்தின்
விலைமதிப்பைத்
தாண்டிப்
போய்விட்டது !

……………………

……………………

ஒரு
மாதத்திற்கான
சந்தணக்குச்சிகளின்
பெறுமதி

……………………





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பள
நாட்களில்
நான்
வாங்கி
வரும்
சின்ன சின்ன
சில்லறை
பொருட்களிலும்
தங்கி
இருக்கிறது !
..................
..................
என்
மனைவியின்
மிகப்பெரிய
சந்தோசமும்.....
................
................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

......................

.....................

சிகரட்

காலியாகும்

வரையே.........

என் நண்பனிடத்தில்

சிரிப்பைக்

காண்கிறேன் !

.................

.................அவசரமாய்

இன்னொரு

சிகரட்

வாங்கவேண்டி

இருக்கிறது !

.....................

......................

அதுவும்

கடனுக்கு.........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.....................

.....................

மலட்டுச்

சம்பிரதாயங்களே

நம்

வாழ்க்கையின்

குழந்தைகளாகி

விட்டதால்

..................

..................

நாகரீகக்

குருதியை

உடனடிப்

பாலாக்கவேண்டி

இருக்கிறது

.....................

.....................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் – நீ
யார் என்று சொல் !
என்னைத்........
தெரியும் என்கிறாய் !
என் கொள்கை........
பிடிக்கும் என்கிறாய் !
சாதுவாய் சிரிக்கிறாய் !
சரிந்து இரசிக்கிறாய் !
வார்த்தைகளால்........
அணைக்கிறாய் !
முதலில் – நீ
யார் என்று
சொல்.........
........................
............ என்னை
ஏமாற்றிப் போன என்
காதலியின் சாயல்
உன்னிடமும்
இருப்பதால்
முதலில்.......?...........




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குழந்தைப்
பேற்றின்போதும்
இவ்வளவு
துன்பப்பட்டதில்லை...
வார்த்தைகளை
தழுவுகையில்தான்
நீளமாய்
வருத்தப்படுகிறேன்!

– வி. முகிலன் –
நெடுந்தீவு –13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org